# தலைவர் கலைஞர், இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாள் இது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதனால்தான் உலக அளவிலான பல்வேறு பல்கலைக்கழகங்கள் J.N.Uவோடு இணைந்து பணியாற்ற விரும்புகின்றன. அதனால்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் J.N.Uவில் தமிழுக்கு ஒரு தனி இருக்கை இருக்க வேண்டும் என்று விரும்பி, அதைச் செயல்படுத்திக் காட்டினார்!

15 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு அந்த இருக்கையை தனி ஒரு துறையாக வளர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறையை உருவாக்க 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கினோம். J.N.Uவோடு பன்னோக்கு கலையரங்கத்திற்கு அருகே உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவரின் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாகித்ய அகாதெமியும், J.N.Uவும் இணைந்து நடத்தும் இந்த விழா மூலமாக தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய இலக்கிய முகமாக அங்கீகரிக்கப்படும் நாளாக இது அமைந்திருக்கிறது.

இந்த நேரத்தில் இங்கு ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன்... இலக்கிய உலகில் பரவலாக அறியப்படும் செய்திதான் என்றாலும், அதை இந்த இடத்தில் பதிவுசெய்ய வேண்டியது அவசியம் என்பதால் சொல்கிறேன்... 'சாகித்திய அகாதெமி விருது' பெறும் படைப்பாளர்களுக்கும் வீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று, 'கனவு இல்லம்' என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன்.

இந்தத் திட்டத்தில் இதுவரைக்கும் 15 அறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசு கனவு இல்லம் வழங்கி இருக்கிறது! பரிசுத் தொகை ஒரு இலட்சம் என்றால், வீட்டின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல்! அதுவும், அந்த வீட்டிற்கான பத்திரச் செலவு முதலான வற்றையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. 'கனவு இல்லம்' திட்டத்தின் நீட்சியாக சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றவர்களுக்கும் 'கனவு இல்லம்' வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### எழுத்தாளரைப் போற்றும் சமூகமே உயர்ந்த சமூகம்!

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் இதனை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். இதற்கெல்லாம் ஒரே நோக்கம், படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும் என்பதுதான்! எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும்! இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக மக்களின் உயர்வுக்காக அவர்களின் சமூக விடுதலைக் காக முற்போக்குச் சிந்தனைக்காக இயங்கிய இயங்கும் எழுத்தாளர்களை தமிழ்ச் சமூகம் உச்சிமோந்து கொண்டாடத் தவறியதே இல்லை! அந்த வழியில்தான் தலைவர் கலைஞர் அவர்களும் தமிழ் இலக்கியவாதியாக இருந்து, சிறப்பான படைப்புகளைக் கொடுத்தது மட்டுமல்லாமல் சிறப்பான படைப்பாளிகள் அனைவரையும் அங்கீகரித்தார்! அரவணைச்சார்! அதுதான் அவரது தனிச் சிறப்பு!

இலக்கியவாதிகளுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் செய்த ஏராளமான பணிகளில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க ஒன்றுதான். தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக 7 கோடியே 76 இலட்சம் ரூபாயை வழங்கியது! அத்தகைய தலைவர் கலைஞரின் அடியொற்றி, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் இந்த நான்கு ஆண்டுகளில் 36 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, நூலுரிமைத் தொகையாக 4 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது!

### நூலுரிமைத் தொகை ஏதுமின்றி - கலைஞரின் நூல்கள் நாட்டுடைமை!

அதுமட்டுமல்ல, தன்னையே தமிழ்நாட்டுக்கு ஒப்படைத்த தலைவர் கலைஞர் அவர்களின் அனைத்துப் படைப்புகளும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி, நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது! 75 திரைப்படங்களுக்கு கதை திரைக்கதை வசனம், 15 புதினங்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 210 கவிதைகள் என்று படைத்தவர் அவர்!

### கலைஞருக்கு - கலிபோர்னியா பல்கலைப் பேராசிரியர் புகழாரம்!

இலக்கியத்துறையில் மட்டுமல்ல, அரசியலிலும் கழக உடன்பிறப்புகளுக்கு ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் 'கரிகாலன்' என்ற பெயரில் கேள்வி - பதில், தான் நடத்திய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்கள், தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை ஆறு பாகங்களாக 'நெஞ்சுக்கு நீதி' என்று எழுதியதோடு கலைஞரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கிறது. இதெல்லாம் மட்டுமே ஏறத்தாழ ஏழு இலட்சம் பக்கங்களுக்கு மேல் இருக்கும்! இது அத்தனையையும் ஒருவர் படித்து முடிக்க வேண்டும் என்றாலே, ஒரு ஆயுள் தேவைப்படும்!

கலிபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் அவர்கள் "கலைஞர் போல் அத்தனை படைப்புகளை எழுத வேறொருவர் முயன்றால் அதற்கு ஒரு பிறவி போதாது" என்று சொன்னார்! அத்தகைய அறிவுப் புதையல்தான் தலைவர் கலைஞர்! கலைஞர் ஆட்சி என்பது, தமிழாட்சி! அதனால்தான், தமிழுக்கு செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்து, செம்மொழி மாநாட்டையும் உலகம் பாராட்டும் வகையில் நடத்திக் காட்டினார்! அவரின் வழித்தடத்தில், நம்முடைய திராவிட மாடல் அரசும் மொழிக்காக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏராளமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி, தமிழாட்சியை நடத்தி வருகிறோம்!

### அடுத்த தலைமுறைக்கும் பயன்படும் - கலைஞரின் தமிழ்த் தொண்டு!

**"தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருதல் வேண்டும்"** என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். அத்தகைய தலைவரான முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த் தொண்டினை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க இந்தக் கருத்தரங்கம் பயன்படவேண்டும்! கலைஞரின் புகழ்பாடுவதாக மட்டுமல்லாமல், கலைஞர் உருவாக்க விரும்பிய சமத்துவ எண்ணமும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க இதுபோன்ற கருத்தரங்குகள் பயன்படவேண்டும்!

### படைப்பாளிகள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெறவேண்டும்!

தமிழ்ச் சமூகத்தில் முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும். படைப்பாற்றல் பெற்றவர்கள் தொடர்ந்து தங்களின் படைப்பை எழுதி வழங்க வேண்டும்! சிறந்த படைப்புகளை இதுபோன்ற அமைப்புகள் பாராட்ட வேண்டும்! படைப்பாளிகள் அவர்கள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற வேண்டும்! இதைத்தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது! சாகித்ய அகாதெமி போன்ற அமைப்புகளும் இந்தப் பணியை தொய்வில்லாமல் தொடர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு விவகாரம்!

## தேர்தல் ஆணையத்துக்கு மம்தா கண்டனம்!



*கொல்கத்தா, ஜூன் 28-*

இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான, புதிய நடைமுறைக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சரிபார்ப்பு தொடர்பாக, தேர்தல் ஆணையம் புதிய நடைமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன்படி, புதிய வாக்காளர்களை சேர்க்கும் போது பொதுமக்கள் தாங்கள் இந்திய குடிமக்கள் என்பதற்கான ஆதாரங்களை காட்ட வேண்டும், வயது, பிறப்பிட சான்றிதழ்களை வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது ஏழை வாக்காளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை என்று புகார் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் ஆணையத்தின் இந்த புதிய நடைமுறைக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, திருத்தம் மேற்கொள்ள பிறப்பு சான்றிதழ் கேட்பது மிகப்பெரிய மோசடி திட்டம் என்று மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் ஆணையத்தின் புதிய திட்டம் என்பது தேசிய குடிமக்கள் பதிவை புறவாசல் வழியாக திணிக்கும் முயற்சி என்றும் இது என்.ஆர்.சி. பதிவை விட மோசமானது என்று அவர் சாடியுள்ளார். இதற்கு அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் எதற்காக இந்த புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டது என்பது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது

# ஒகேனக்கல் அருவிக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு!

*தருமபுரி, ஜூன் 28-*

கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் அருவிக்கு விநாடிக்கு 70 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து ஒரே நாளில் 20 ஆயிரம் கன அடி அதிகரித்து, 70 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனிடையே, ஒகேனக்கல் அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க 3வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பால் நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஒரே நாளில் 4 ஆயிரம் கனஅடி நீர் அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு 44 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் நீர் மட்டம் 114 அடியாக உள்ள நிலையில், மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக 22 ஆயிரத்து 500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, கர்நாடகாவின் மண்டியா மாவட்டம் கிருஷ்ணராஜ சாகர் அணையின் நீர்மட்டம் 121 அடி அணையாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 52 ஆயிரத்து 829 கன அடியாக உள்ள நிலையில், அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 51 ஆயிரத்து 110 கன அடியாக அதிகரித்துள்ளது. இதே போன்று, மைசூர் மாவட்டம் கபிணி அணையின் நீர் மட்டமும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அணையின் மொத்த உயரம் 84 அடியாக உள்ள நிலையில், தற்போது நீர்மட்டம் 79.33 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 31,644 கன அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து நீர் வெளியேற்றம் 30,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியம் சார்பில் தாட்கோ மூலம் தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் வழங்கினார்கள். தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய செயல் அலுவலர் கோவிந்தராஜ் (ஓய்வு) , தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய துணைத்தலைவர் கனிமொழி பத்மநாபன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## நெல்லை மாவட்டம் -

# இராதாபுரம், நாங்குநேரி ஊராட்சிகளில் 3 புதிய நியாய விலைக் கடைகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

*நெல்லை, ஜூன் 28 -*

நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் 3 புதிய கிளை நியாய விலைக் கடையினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர் ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

நெல்லை மாவட்டம்,இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம்,சமூகரெங்கபுரம், கரைச்சுத்துப்புதூர், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம் ஆ.சாத்தான்குளம் ஆகிய பகுதிகளில் புதிய கிளை நியாய விலைக்கடைகளை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றும் வகையில் குடிநீர், சாலைவசதி, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக,இராதாபுரம் பகுதியிலுள்ள பொதுமக்கள் நியாயவிலைக்கடைகளில் சிரமப்படாமல் நியாய விலைப் பொருட்களை வாங்கி பயன்பெற வேண்டுமென்ற நோக்கில், அதிக குடும்ப அட்டைதாரர்கள் உள்ள நியாய விலைக் கடையினை பிரித்து புதிய கிளை நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்படுகிறது. இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சமூகரெங்கபுரத்தில் அதிகமான குடும்ப அட்டைவுள்ள நியாய விலைக்கடையினை பிரித்து, பங்களாதெருவில் புதிய கிளை நியா விலைக்கடையினையும், கரைச்சுத்துப்புதூர் பகுதியிலுள்ள கடையினை பிரித்து சூடு உயர்ந்தான்விளை, கல்விளை பகுதியில் புதிய கிளை நியாயவிலைக்கடைகளும், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம் ஆ.சாத்தான்குளம் பகுதியிலுள்ள நியாய விலைக் கடையினை பிரித்து கருப்புக்கட்டி பகுதியில் புதிய கிளை நியாய விலைக்கடைகளும் இன்று திறந்து வைக்கப்பட்டள்ளது.

மேலும், தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.இப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் விரைவில் தாமிரபரணி குடிநீர் கிடைக்கவுள்ளது.இப்பகுதி மக்களின் தேவையினை உணர்ந்து அனைத்துத்திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், ஜான்சி ரூபா,அறங்காவலர் குழு உறுப்பினர் முரளி, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் தினேஷ்கோ வில் மணி, ஊராட்சி மன்றத்தலைவர் அந்தோணி அருள் துணைத்தலைவர் பேச்சியப்பன், கவுன்சிலர் இசக்கி பாபு,தாஸ், முத்துலெட்சுமி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை செயல் விளக்கக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



*மதுரை, ஜூன் 28-*

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி விடுத்த அறிக்கை வருமாறு:-

மதுரை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை குறித்த செயல் விளக்கக்கூட்டம் இன்று (28.06.2025 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற இருப்பதால் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA 2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA - IT WING) அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்..

பொருள்:

- "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை குறித்து, கழக ஆக்க பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்" வருகிற 2025 ஜூலை 1ஆம் தேதி காலை 11.00 மணியளவில் கழக துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கழக மாணவர் அணிப் பொறுப்பாளர் ஆ.இராசா அவர்கள் தலைமையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாணவர் அணி மாநில நிர்வாகிகளான மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பொருள் : கல்லூரிகள் தோறும் கழக மாணவர் மன்றத்தை கட்டமைப்பது தொடர்பாக.

**அண்ணா அறிவாலயம்"**
**சென்னை18.**
**நாள்: 27062025.**

**இரா. ராஜீவ்காந்தி**
**செயலாளர்,**
**தி.மு.க. மாணவர் அணி.**